உ

சிவமயம்

இருபத்திரெண்டாவது,

# அகஸ்திய மகாமுனிவர்

# வகாரமதி வெண்பா — 100

## கலி விருத்தம்

திகடசக்கரச் செம்முகமைந்துளான்
சகடசக்கரத் தாமரைநாயகன்
அகடசக்கர வார்க்கொழிலாங்கெழும்
விகடசக்கரன் மெய்ப்பதம்போற்றுவாம். 1

நாயகமென்றே யகத்திணினைத்தேனகத்தியனென்
வாயில்வழுவாதொழுக வந்தருளும்-பாயிர
மாயுரைத்தவைகநூறும் வகாரமதிவெண்பா
சேயுரையவிந்நூறுஞ் செப்பு. 2

செப்பினேனின்னூறுந் திரளடக்கமைம்பதுடன்
ஒப்புமதிவெண்பாநூ றுதினே-னிப்புவியில்
புத்தியுடையோர்க்கறிவாம் புகலவேயிவ்வெண்பா
சத்தியுரை கண்டவர்க்காந்தான். 3

தானறிவாராயித் தைகணூற்றினம்பதனுள்
வானவிணைடைக்கலமாம்-வர்திற்றும்
கரைகாக்குங் கடல்மீனைக் காயவிழுக்காண்பூனை
திரைகாக்கும்வளமதுவாஞ் செப்பு. 4

வையப்பமோடே கையப்பவாடை
எய்பப்பவாடை டையப்பியிடே 189
ஈடெரிவுதேனை வாடெரிவுமினை
கூடெரிவுதானே காடெரிவுதானே 190
மீனைவைக்கப்பிச்சி மானைவைக்கவிசி
ஞானம்வைக்கயீதா மென்கலைகேளே 191
ஏனமதுகூட ஆனமதுவூடே
வானமதுசாட மோனமறனுமே 192
நாடெங்குமெச்சி எடென்றுவச்ச
தேடென்றுவுச்ச மேடென்றுதச்ச 193
தச்சதுபூரணச் சந்திரவாலை
மெச்சதுவென்குரு மேல்குலையாக 194
வைச்சதுபங்க மாமலர்மீது
பொச்சுதுவாயிடை போய்விழுவாரே 195
போய்விழுவாரவர் பொய்யுரைசெய்தோர்
நோய்விழுவாரிது நூல்வழிவாரார் 196
பாய்விழுவார்வசை பண்ணியதீயர்
நாயெனுமோகெடை கய்யகுருவாரே 197
வாருரைசந்திர வாலைமெய்நூலை
பேருரைசெய்த பெரியோரைநாடி 198
சீருரைசெய்தொழில் தேருவார்சித்தர்
ஏருவார்இரு நூரிறைமுற்றே. 199

## பூரணச் சந்திரோதயவாலை-200

முற்றிற்று.

செப்பும்வைப்புமொப்பு மவைசெய்யவேகந்தீசர்
அப்புவைப்பக்காட்டினு ரடியவர்க்குத்-தப்பாமற்
கைம்புரட்டைகாட்டான் கண்விழித்தான்முந்நூறிற்
செப்புவைப்பேனென்றது செய். 5

செய்யாளுரைத்துவைத்த திரள்கோடி நூல்தனிலுஞ்
செய்பாகமென்ற திறமே-மைமாயக்
காயைத்தியைந்தேனென் காவியத்திற்பரியாசைத்
தாயார்விண்டாளெந்தன் சார்பு. 6

சாரப்பொருளிதுவாத் தன்மையதுவாளிதுவாங்
காரப்பொடிபூசுங் காயம்-வாரத்
தாக்கிவிடுமாக்கிவிடுந் தக்கசென்மமாட்சியறும்
வாக்கிலிடுமெச்சமென வை. 7

வையம்பக்கிவிடும் வாம்புலிமாந்தாக்கிவிடும்
பையப்பையப்பூச்சொரியும் பாவமாம்-மெய்யாகும்
தையல்துணையாகுங் கார்குழலாள்வாய்நீராஞ்
செய்யவிதின்கூறென் செப்பு. 8

செயலானந்தீசன் செப்பியநற்சோடசத்தில்
வயல்விளையாம்முந்நூறும் வாய்த்தால்-பயனாகும்
வெப்புக்குடலுக்கு விரிகுடலா முந்நூறுஞ்
செப்புக்குடல்குன்ப னென்வாய்செயம். 9

செய்யமதியமிர்தவெண்பா தித்திப்பாகுசெஞ்சத்தி
லையமில்லையதி லாய்ந்தோர்க்கு-மையயங்

கூட்டுங்கடலுங் கொதிமலையுமாமதியும்
பூட்டுவங்கப்பெண்கொடியாள் பேசு. 10

பேசுவோங்கேள்மகனே புலத்தியா பூவுலகில்
மாவுமரிசிவென்ற மகிமையது-மாவான
னஞ்சமுளைப்பயிரால் வளர்ந்தேறிக்கதிர்நெல்லாய்
மஞ்சரிசிமாவென் றறி. 11

அரியரிசிமாவா மதூலினந்தவபல்மண்ணும்
பொரிமதிநேடாம் பொற்கொடியாய்-விரிவதென்ன
கட்டுக்கடல்வீரங் கயற்காய்பூவட்டநெடுங்
தட்டமங்கைச்செவல்லிச் சாய். 12

சாயக்கடைபூவுஞ் சார்ந்தமகளின் பூவும்
வாயடக்கக்கன்னி வடியாநேம்-நேய்
கொட்டகரையோசை கொடிமடவாள் பூக்கையிலே
கட்டுவதுநான்வரசு காண். 13

காணக்கரிவாயாள் கண்டஞ்சிவப்புடையாள்
நாணமுயர்வாக்கும் வனிதையாம்-மோனங்
கொண்டகணவனில்லை கூடிக்கருதரிக்கும்
வண்டக்குழலாள் சூலை பார். 14

சூலையிலேமணிதருஞ் சுந்தரியாடன் னுருவாய்
காலையிலேமண்டுகங் காத்திருக்கும்-வாலையறி
கண்டெடுத்தாய்தேனைக் கடனீரி லுறவாகப்
பண்டுசெய்தபூசை பார். 15

பகரவொருபூமண்ணும் மச்சையருந்தாதியரும்
உவர்சலக்கக்கண்டா லோடுமே-நுலரடக்கி
நெல்லரிசிதள்ளிவிடும் நோயகவோட்டி விட
வல்லியெனவந்ததப்பா வாழ்வு. 16

வாழ்பூதருங்கசனை வட்டமிடும்புண்கட்டி
மூழ்கிவருஞ்சுந்தரத்தில் மூளாதே-தாழ்வாக
எட்டிக்குள்ளேவளர்த்தி யிட்டவடிதனிலேற்றில்
கட்டவகைகாணவெனக் காண். 17

காணுவதுகாரமணி கலக்குஞ்செல்லத்திமுட்டை
பூணுவதுபூரமென்று புகட்டிநல்வீரம்போம்
கண்டுவிசாரத்தைக் காணவிடுவெண்சுடரைச்
சொன்னகுறிப்புலத்தியர் சொல். 18

சொல்லறுமோமனது துய்யசைபெண்ணோட்டம்
வெல்லவருமோநேயம் விண்டாலும்-புல்லு
தன்பிறப்புமிறப்பு மிவைசார்ந்தாலறிவாகு
மென்பிறப்பையானறியே னியல்பு. 19

இயலிசைகூட்டவட்ட மிளங்கொடிக்குமாட்டாவோ
வயலிசையில்நீரும்பாயும் வாய்க்கால்-துயலாகும்
மண்ணடிக்குப்பானை மாவடிக்குத்தானைப்
பெண்ணடிக்குப்பாமாலை பூட்டு. 20

பூட்டவொருகூட்டாகும் பேய்க்கரும்பாந்தித்திப்பும்
காட்டமதின்மாட்டுங் காணவே-பூட்டே

காய்க்குமேயிஞ்சிக்காய் கைப்பழக்கமஞ்சரக்காய்
வாய்க்குமறிவெண்பா வறி. 21

அறிமதியாமதிகமென்ற பானவெண்பாவிதுவாகும்
வறியமதியிதுவாக வாய்க்குமே-மதிப்பூன்றி
நொய்யநுகர்ந்துண்டால் நூறுகுமாதிமுதல்
வையமீதிலறிவ தரிது. 22

அறிந்தோமிவ்வெண்பாவி லடக்கினேனென்வாதகுறி
நெறியகன்றபூரணமும் நீடேட்டிக்-குருகியது
வஞ்சமிஞ்சுநெஞ்சகற்றி வாமியிருப்பிடமுலி
கொஞ்சுகிள்ளையாயுரைத்த குறி. 23

உரைத்தகுறிதப்பாது ஆறுறவுவொன்றுறைற்
குறைத்தகரைபங்குண்டாமென்நாளும்-விளைத்தமுத
காணிக்கரைக்காணி காற்காணமாகக் [ல்
காணியரைக்காணிவென் றறி. 24

என்றரைமுந்திரிக்கீ ழெடுத்தாடுமாவரைக்கு
ஒன்றரைக்குகாமாவிரிப் பூட்டியபின்-சென்றறைய
முத்துக்கொருவிலையாம மொய்குழலாளிருவிலையாம்
வைத்தசன்னிமுவிலையாள் மயம். 25

மயமானபூக்கொடியு மணலாடுசர்க்கரையும்
வயமானகாரிடைச்சி வாயப்புல்லும்-செயமாக
முட்டக்கரைகுயவன் முட்டேறிந்தவெண்கலத்திற்
பட்டுவிடும்வெண்ணீறு பார். 26

பாரையடிக்கல்லு பாயுமண் பூக்குடுப்பு
வாரையடல்நீறும் வாய்ந்தாக்கால்-ஊரார்
ஒக்கவிடுமொன் றுமுக்கா லொன் றுக்குவையாகும்
வைக்கதணன்மீறிவரு மண். 27

வருணமண்ணில்வாழுமங்கை வசந்திமென்றசெல்வக்
பெருகுமண்ட முட்டிவிடப்பேறுமோ-நரிவாயில் [தி
கண்டசிப்பிவோடாகும் காணக்குமகள்ளை
வண்டுசிப்பிக்காலாம் வயம். 28

காலாங்கடகீர்க் காட்டகத்திம்காயம
நாலாம்வலைறாலாம் நாகமாம்-சேலாம்
வட்டகட்டபெட்டாகுமே வாய்நீதாற்றுவர்க்கும்
முட்டவழிநெஞ்சமென்றே முன். 29

நெஞ்சமனமுறையும் நெற்கடையாமண்களையும்
வஞ்சமில்லைசொல்லிவிட்டேன்வாயவிறை-பஞ்சமென்
பார்க்குளிறுபாழா மக்களாவாழ்கவென்று [ற
ஆர்க்குள்ளொன்றுளை திரு வழி. 30

அறிவுடையவெள்ளை யறிவான்பிள்ளை
தெருவில்விளையாடிவருஞ் சேயே-உரிமையுடன்
கைக்கிசைந்தசர்க்கரையைக் கடுவாய்க்கடையிலிட்டு
மொய்க்கவிரும்புவாயினீ றுன். 31

உண்ணைக்கல்லாகு முவர்மட்டம்நீறாகும்
பண்ணைத்தொழிலமைக்குப் பாலாகு-முண்ணுமை

கோட்டுக்கடுவாளங் கொம்பனையாள்பிள்ளை தலை
ஊட்டுவெட்டவெளியா மியல்பு. 32

இயல்பவளமலையு மீரா றுபன்னிரண்டுங்
வயம்படுவக்காலே வட்டினால்-இயல்பாக
பட்டமதயானை படுகுழிக்குள்ளாகும்
வெட்டவெளியிரவுபக லாம். 33

பகலானசூதம் பயில்வார்வெள்வங்கம்
நிகாசாரவீரகரந் தப்பாது-இயலான
கொட்டமலைகொம்பும் கோதைவளர்பாரவட்டும்
மூட்டவெட்டிமடிவாராம் மூன். 34

முன்னைவிழுப்பாமடிப் பின்னைவிழிகாம்புமலை
தன்னைநடுவாக்கிவிடுந் தக்கவரோ-பின்னமென
கொம்புரத்தான்மங்கை குமுறமுலையிலகுந்
தாம்பிறத்தான் தங்கிறந் தாக்கு. 35

தாக்கிவிடுமாச் சடையின் தக்கரைக்காணிமா
தூக்கிவிடு முத்திரைக்கீழ் சொல்லிவிட்டே-நோக்கம்
வைக்குமலை முந்நீரும் வாதிமன்றசைபநீரு
மொக்கவைரைகடீரா மொன்று. 36

ஒன்றுமொக்கொண்டுயிட மூன்று மொக்கசாயிரண்டு
அன்றுமொக்கத்தள்ளிவிடு மதிலொன்றி-பண்டாக
மிக்கதோரக்கவசைக் கெங்கைசுனைவிடும்
வைக்கவிதூவாகுமாங் காண். 37

காணப்புலத்தியா காமமனப்பூட்டுமொக்க
வானத்துறை துரும்பு வந்தித்தால்-நாணமறும்
அக்கரைமாயிக்கரைப்பெண்ணா சிபிள்ளைக்கைகூட்டச்
சக்கரைக்குநெய்கூட்டத் தான். 38

கூட்டத்தாரெட்டெட்டுங் குளாவிவைரமெய்குறிகேள்
நாட்டமென்னவெண் கொழுந்தநாடார்-எட்டமிடும்
வாய்க்கசப்பையென்றுமிழ்ந்தால் யாங்கைசிரிப்பாளவ
ளே, யாய்க்கமதி கூட்டுவாய். 39

மதியிருந்தாலாடிவரு மனமிருந்தால்கூடிவிடுங்
கெதியிருந்தால்தப்பாது இளத்தினேன்-சதியாரே
மாண்டமாக்கரியினால் மாறுமக்கள்யாவருமெந்
தூண்டாமதிவெண்பா சொல். 40

சொல்லுவடமொழியாய்த்து தந்தமிட்டவாரடைக்கு
வில்லுமம்புமொக்கவிட்ட வெண்கலமேவல்லதங்க
ஓசையிடமாற்றுடு முரியுழக்குச்செவிடெனவே
வாசைசகமலமாகு மெனவே. 41

மாகுமென்கித்தாமன மாரியிட்டவெட்டமிது
வாகுமெனக்கண்டோர்க்கு வாய்க்குமே-சாக
வேமானக்குதிரை வெட்டவெளிகட்டிவைக்கும்
மாகுமங்கைவாழ்வா மிது. 42

வாழ்வுதருசோணமலை வழங்குவருமமுதகடல்
சூழவைக்குமாதாப்போல் சொல்லரிது-வேதம்

பாசுபடாவெள்ளைநிற மங்கைகண்டால்தங்கநிறம்
மாசுபடாமொழியிது வாம். 43

வாழியென்மாமி தங்கை வந்தவழிகண்டறிந்து
தூசுவிடுசுண்ணக்கல் தொக்காகு-பேசரிது
மைக்கவமாய்ப்பதாம் மையமேன்தங்கியிடை
வைக்கச்சலமாகுமென் பாய். 44

வாயிடுநீரை வாழ்த்திவிடுமாளிகையில்
பாயிலிடும்பாகம் பார்த்துவிடு-ஞானமென
குப்பியடையாயடைக்குங் கூக்குரனுமில்லையடி
செப்புவாரிதுவென் றியம்பு. 45

இயம்பக்கடவாகு மெம்பெருமான்காணவென்ற
வயங்கசம்பத்தை கண்டவாதுமே-குதம்பையிலே
சொல்லரிதுசொல்லரிது சோழவளநாட்டரிது
வில்லரிதுகல்லரிது வேதை. 46

வேதைக்குக்காரம் வியன்றகங்கைகொலைதாரம்
வாதைக்குப்பயன்றாரம் வாய்த்தாக்கால்-நாதங்
கண்டாடுமோசை தசைபோடும்வாசி
கொண்டாடுமிடத்தொழிலே கூறு. 47

கூறுமடாமாதவிடாய்குறித்தலைப் பிண்டமென்றுஞ்
சீறுமண்டமுட்டையென்றுஞ் செப்பினே-ஞால்மறை
வாய்,ஓதிவைத்தவாசகந்தி னுணர்வறியாச் சண்டிகட்
கு, மாதுவைக்கு றாலின்மயம். 48

மயமாகும்பெண்கருவாம் மக்கள் தலைசோதனையாம்
வயமான விக்குறிகள் வாட்டிவைத்தேன் - துகைகாணு
மட்டமுதம்பச்சைசயிலே மாறுதோமாமாண்பருக்குக்
கட்டவகைதொழிலிதிலே காண். 49

காணவென்றுயின்னூற்றிற் கசடகற்றிக்காணவுனக்
கூறுவைத்தேன் கும்பனென்பேர் கொண்டாடவாணி
தக்கவளநாடிருக்குந் தாய்பிறந்நாட்டிலறி
மிக்கபுலத்திசன் முறை. 50

முறைமைக்களாவாம் மூத்தமகள்பெண்டாவாள்
தாரமச்சான்மச்சினனுந் தம்பிக்கு-வுறையோடே
கூட்டிநுல்நல்லம்மான் கூட்டிவிட்டபெய்மாமி
காட்டில்வினையாருமிந் நாடு. 51

நாடுமகள்பேத்தி நளமனைக்குச்சக்களத்தி
வாடும்பிள்ளையாள்பிள்ளை வாய்த்ததாககோல்-பாடுபடு
முட்டுவிட்டகுளை முனைநடுவேயெ
கட்டவைத்தபணப்பையாங் காண். 52

காணுதமைத்துனர்க்குக் காணக்கண்ணீரொழுகு
நாணுதாகாய்க்குமப்போர் நன்றாய்ப்பார் - ஊணுது
வெட்டிபெறிவெளியிலே வோறுந்தாசாதிக்குக்
கொட்டிவிடுமாப்பிலைச்சார் கூட்டு. 53

கூட்டிகரையானைக் கூப்பிட்டுலக்கையிட்டு
வாட்டியிட்டுமாமியரை மயிராடப்பூட்டறிந்து

கைத்தலமேலோடுங் கைக்கடபம்சாத்திரவில்
மைக்கடமேல்முட மாய். 54

மாயமாமதயானை வஞ்சகரைமண்ணைபுண்ணும்
ஓயாதகைப்பார்த் தோட்டிவிடு-பெயாலே
கட்டழுகிவஞ்சகரைக் காலிவிடுதண்டைபட
வெட்டியெறிநால்மா விடு. 55

மாவிடக்கால்காணி வருமாகாணிமேலேறும்
யாவிபிடமுக்காலும் பாய்ச்சிப்பார்-சாவில்லை
எண்காணிவெட்டுமா வேகாதடங்கிவரும்
பாங்காகமாறிவை பாதி. 56

பாதிமதியாதியிடு பள்ளமணைபங்கினது
வாதியிடுவானறிந்து வாய்த்துப்போஞ்-சாதியில்லை
ஒக்கக்கலத்துண்ணு மோகோகோயுகமுடிந்து
பக்கமுறிவெட்டியே பார். 57

பார்க்கையிலேநாவாழும் பாலையிலேபூவாடும்
பூக்கையிலேசெழியாடும் போக்கில்லை-தாய்க்கருவில்
பாய்ந்துவிந்துதப்பாமற் பலித்தார்களைஈட்டும்
வாய்ந்தவாயிதென் றறி. 58

வென்றறிவேர்வித்தாரும் வெள்ளாட்டி கருவாகா,
பெண்டறிந்தோன் றுனறிவான் பேய்ப்பூவாம்-ஒண்
டொடிக்கு, கட்டினபொன்தாலியிலே காய்த்தகனி
பழுக்காமல், பட்டுதிரங்தென்னடாயன். 59

:r;.+-:-+;=r:1.':!a3::| ::,:---:.---:.::.---;;::=:'n€:.:t-1'i-:::?€tqFa.=:=a::=-4!'iJffi

பயனறியாப்பாரிற் பார்க்கவடிவெட்டாது
நயனமில்லையார்க்குமென நானறிந்த-வயன் முழுது
வைகரைக்குக்கைக்கரையாம் வம்புழுஞ்சோலையறி
மைக்குறித்தகண்ணாள் மனம். 60

மனமாடுமெம்புவியில் மாளாவடிவிட்டபுரைத்
திறமாடக்கூட்டிவிடச் செங்கமறம்-நயமான
கொப்புக்குலாப்பூ கூகைக்குநாட்டூவாத்
தப்புக்குடிவாடியிடுந் தான். 61

தானமறைவண்ணாடுந் தாய்காட்டுமூணாம்
பானுவொளிவளநாட்டிற் பாயந்தேக்துஞ்-சாந்துவரை
தென்னாடுகோனாடு செய்வளநாட்டிலிது
என்னாடுமுண்டென் றியல். 62

உண்டகனிதொப்பையிடு மூட்டுகனிமேனியிடுங்
கொண்டகனியாகக் கும்பிக்கு-முண்டகனி
எம்புவிக்குமெம்பாகு மெங்கள்குருநாதரிட
சொற்படிக்குசுண்ணாம்பு சொல். 63

சுண்ணாம்பரையேறுஞ் சகத்தபிள்ளைகாலேயும்
வண்ணானிரண்டுமொக்க வாய்க்குமே-எக்காணும்
நஞ்சக்கரைத்துஞ்சட்டும் நன்றூட்டும்வெள்ளலறி
முஞ்சியொடுகாணலிது வாம். 64

காணவுரையாடுங் ககனமென்றாடும்
வானவிண்ணார்தானே குமட்டாகும்-பூணையென

யந்திரங்கியுண்டமிர்த வாய்த்துவராய்மீடிவிடும்
கந்தமித்துவாமென்றே கருது. 65

தருதாலிப்பூவாடிக் கணைக்கட்டிக்கொண்டாடி
ஒருதாலிக்கிருதாலி ஆட்டிவிட்டால்-கருதாலி
செங்கைவளைகுறைச்சலென செப்பாதேசெப்பாதே
யெங்குண்டுக்குறியென் றியம்பு. 66

குறியிட்ட ஒட்டகத்தில் குடக்குறைக்குந்தப்பாது
உறியிட்டுவெற்றிவித ஒருமூக்காஞ்-சரிவிட்டு
மூக்காற்செவிடாகு மூர்த்திரைக்கீழ்த்தப்பாது
வம்பாதியின்பெருமை யாடு. 67

ஆடித்திருக்காயு மாவளரியின்மேற்றேறுலும்
மாணபுரட்டாசி வைகறையும்-வானைமுளை
ஐப்பசியிற்றன்வெடிக்கு மாகுமற்றமின்னலென்
கைப்பிசகால்நாடுமித்து காண். 68

காணவருங்கார்த்திகையுங் கடுங்குளிராமார்கழியும்
நாணியொடுதைப்பூவாம் நாளுட்டும்-மாணிலத்தில்
மாசிலாமலர்பூவா மாதருறிபங்குனியாம்
வாதமதுசித்திரையில் வை. 69

வைகாசியிலே வளநாட்டுக்கன்னிகையால்
மையமெனக்கண்டநீ மாதவிடாய்-மையமிட்டு
வெப்பகதிர்காட்டி வெங்கலப்பெண்தலைபூட்டி
ஐயமிட்டுவாழ வறி. 70

வாழிமலைப்பங்கயத்தி வாட்டிவரவழியேறும்
ஊழியென்பதெல்லாம் போமென்றேறும்நாழிகொண்
வொக்கநெய்த்தன்னையிட்டு வொன்றிரண்டுசாரமிட்டு
வைக்கதிரோறுமென வை. 71

வைத்தமணிமொய்த்தகடல்வாய்க்கவறுவீரன்
றைத்தநடமாடியிடுஞ் சப்பாது-மெத்தனவே
கொம்பணையாடான்வாழ்வு குடியேறுகாய்க்குமென
எம்பிரான்பெண்டீரியல்பு. 72

பெண்டீரியலான பேய்க்கூத்தன்சொற்படிக்குக்
கண்டோவவன்வித்தாற் காயாகும்-ஒண்டொடியாள்
காரமென்றவாணிச்சாற் சாயமிலேறிவர
பூரமெனநாமறிந்த புல். 73

புல்லாகும்புகல வறியதோலாடும்
எல்லாமதிலாடு மெட்டெட்டுஞ்-சொல்லாகுங்
கரைகரைக்குந்தானேறி கரைவீடும்வாணிப்பூ
துறைபறிந்தபுலத்தியனே சொல். 74

சொல்லமலைச்சோணமலை சுந்தரிப்பெண்வல்லிமலை
நல்லமலைநெஞ்சிமலை நாட்டிலுண்டு-கொல்லிமலை
குடகுமலைக்குதட்சணையிற் கும்பமலையென்மலைநேர்
சுடர்மலையாகுமெனச் சோதி. 75

சோதிமலைசார்ந்துவளர்சோழவளநாட்டிலுண்டு
ஆதியென்றபெண்குரும்பை யாதியுண்டு-சாதியது

வாந்தியதுமொக்கவுண்டு வங்கணங்கள்மெத்தவுண்டு
சாந்தியென்றசிறுபெண்தா யறி. 76

தாயறியாத்தன்னைதயரில் தாரமில்லைவானமில்லை
வாயப்பிறப்பில்லை மானமில்லை-தாய
வெட்டிகளைமீதிலிட வேண்டாநாள் தூணெடுக்க
பட்டத்துளிர்தானெடுக்கும் பால். 77

பால்சொரியும்பாரிலிடப் பட்டதுளிர்தானெடுக்கும்
மால்சொரிவான் பூ மாரிமா நிலத்தில்-யார்கரித்து
வெண்டவடமேலாவென வெற்றிதருங்கண்டனுக்கு
கண்டவிடந்தாயாருமா காண். 78

காணலாம்பொன் மேனி கங்கைமங்கைதன் வாழ்வில்
நாணமில்லைகத்திப்பென்நாட்டு-வானமுயர்
கோட்டிகளைசிலையிட்டுக் குப்பிசிறாசீரைவிட்டுத்
தாம்பிபின்டத்தீதாலேயிடத் தாக்கு. 79

தாக்கச்சமர்க்களமாகு சன்னசியாசனமாம்
வார்க்கணிவிஷமாம் வாய்ப்பாக்காந்-தாக்கமிக
யேக்கமிகக்கண்டறியா னெம்மிட தலைப்பிள்ளை
மாயக்கனிக்குறிசொன்னேன் மனம். 80

மனமறிந்தால்மயமெரிய மண்ணுடும்பொன்னுடாம்
கனமிழிந்தாற்காணலாங்காய்-பினவாக
பூவாகும்பிஞ்சாகும் பொக்காய்கனியாகும்
காயாடப்பூவுதிர்த்த வாள். 81

வாளமலரையிட்டாம் வாய்விட்டாவாயலாகும்
வாளாங்கரைக்காணாநீ பாராது-தாளாகும்
வெண்சுடரிலோட்டமிடும் வையகத்திற்பூவாது
கோஞ்சுமில்பாண்டமனை கோடி. 82

கோடி வடவரையுங் குலாவுங்கமலக்கன்னி
ஓடிவடகிரிக்கு வுறமாறல்-நாடியிது
ஒக்கயணல்பொன்றூடி மோங்காரங் கண்டவெளி
தக்காயிரஞ் சரி. 83

சரியாடலாமுண்டால் தானந்தியாயிரத்தில்
உறியேறியாட்டலா மொன்றுகுங்-தெரிவேறுங்
கட்டைதனலாகாது காயுங்கிரணத்திற்
பட்டுவிக்கும்பச்சைமூலி பார். 84

பாரிலிதையார்காண்பார் பாலகனைபுலத்திசா
நாரிகுந்தவள்மூலி நாமறிந்தோம்-ஊரிலுண்டு
குட்டவரைகோடாங் கும்பனென்போனுடாகும்
மட்டகுழல்மங்கைமணம் பூணு. 85

பூணவறிவேறுவதும் பூரணத்திலாறுவதும்
நாணமதுநீக்குவதும் நாட்டிலுண்டு-தோண
நுண்ணரிவுகொண்டவனே நுகரப்பரிவாகுமென
ஒண்ணாரிந்துவிட்டே னுவண். 86

வண்ணான்துறையழுக்கும் வாய்ந்தகளிறுமவும்
பண்ணுமெனச்சிறுக்கி பாலடையு-மெண்ணுணர்

காட்டிவைக்கும்வெக்கலந்திற் கனகமென் றமைசை
யைப்போல், நாட்டிவிதுமெத்தவுண்டு நவில். 87

நவிலவருகாந்தகிரி நயமானவெண்கிரியும், புலி
யிற்கண்டபொன்கிரியும்பூட்டவே, கவியிலொரு-காட்
டவில்லை யிப்பொருளைக் கடனீருறையாவிட்டாற்,
கூட்டுமச்சாணிறவென்றே கூறு. 88

கூறுமரைக்கரையாங் குஞ்சாக்குக்கொன்றையாம்
வாறுவிட்டபெட்டரைக்கு வைப்பாகுஞ்-சேறு
மூட்டிக்கடைச்சீலையிட்டு முடிந்தேதறுமங்கைகவெள்ளை
நாட்டிவிடுசொன்ன நயம். 89

சொன்னமுறைதப்பாது சந்தானந்தவல்லி
என்னவரைகடறகரையா மெப்போதும்மன்னவனாய்
கோடிமுழுக்கிவிடுங் கோலமலர்த்தாளாடும்
நாட்டவனார்னகடபழக்கங்காண். 90

காந்தமலையுங் கடலுமுறவாகும்
ஏந்துதனமுனக் கியோதோ-காந்தமலர்
காட்டிவைபூக்குங் கானலிலேகாய்காய்க்கும்
நாட்டிலேநாமறிந்தோம் நயந்து. 91

நயந்தவடமேருவாமோ நாரணனார்பள்ளிகொண்ட
கயந்தகடத்தாரைக் கண்டறிந்தால்-கயமாகும்
வட்டமில்லைசட்டியப்பம் வைத்தவர்கெட்டாரும்
கட்டளையாம்நாட்டிலிது காண். 92

நாட்டிலேசுள்ளிகல்லே நவமானபாண்டமிட்டு
காட்டிவைத்தகதிராடுங் காமப்பூ-நாட்டி
வெட்டியொடுபூரணத்தில் வெட்டியெடுசாயமறை
கொட்டியவள்செம்பொன்னாங் குகை. 93

பொன்னாகுமென்னாலும் பொய்யுரையாய்ப்புலத்தீசா
சன்யாசமென்றதொழிற் றப்பாகுங்-கண்ணாணும்
பூட்டிபுடைவெட்டவெளி பொய்யாகுஞ்சூதறியார்
நாட்டிலிதுமெத்தவுண்டு தள். 94

தள்ளிவிடுபொய்த்தொழிலைச் சார்ந்துவிடுமூலிகன்னி
யள்ளிவிடுவெப்பா னருங்கடலே-பள்ளியென
ஓதறிவாகுமென வுள்ளபடி புலத்தீசா
மாதுபாயமுப்பெனவே மகிழ். 95

மகிழ்ந்துமனம்வெளிகண்டா மாட்சிவிடுங்காட்சி
யில்லை, யொழித்துவிடுமெவ்வாழ்வு மோட்டிவிடுங்-
கடுங்களத்திற், தப்பாதுதப்பாது காணாகைமிழ்த்தி
விடும், எப்பாழாமுப்பாழ்மே லேறி. 96

பாழறிவான்பாலையுண்டு பயனறிவான்மவுனமுண்டு
காயறிவான்கனியுண்போன் காலையிலே-மாவாரை
சொற்றவறிவுணவன்று சதாசிவமேகண்டவெளி
மெத்தவறிவோமென் றிசை. 97

இசைகாட்டுவாள்மூலி பிளங்காட்டுங்கடலுப்பு
வசைகூட்டுசாரத்தில் வாதமென - தசைபாட்டம்
வங்களாவைப்பூரம் வாய்த்தவித்துவீரமுடன்
மங்குலமழிக்குமது வாம். 98

மதுவானபாளமுமே மடக்கவது வாகுமெனக்,
கெதிவேறேயில்லையுடன் கிணிப்போம் - பொதுவாக;
நாட்டிவிட்டேன்பேய்மக்கள் நாவடக்கிப்புத்திகொண்
டாற், கூட்டிவைக்குமல்லோ குணம். 99

குணமாமதியன்பதனிற் கூட்டிவைத்தபாகமுறை
மணமாமறிந்தோர்க்கு மயமாகும் - வனமூலி
வேறில்லைவேறில்லை வித்தையுணர்மாண்பழிக்கு
நாரிலைக்காய்கரிகட்டை நயம். 100

நன்றேபுலத்தீசற் நாயகியாள் திருவடிக்கீ
வயன்றசிறுபிள்ளையென வாழலாம் - நயந்த
மாற்றிவைக்கும்புத்தியறி மதியமுர்தமானவெண்பா
சாற்றிவைத்தமாலைமுற்றுஞ் சார். 101

## அகஸ்தியர் வைசாரமதி வெண்பா-100

முற்றிற்று.